இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 26.09.2026

# இந்தக் காலத்திலுமா இப்படி?

தேவதாசி முறையை ஆதரித்தும், அதற்கு புனிதம் கற்பித்தும் இந்தக் காலத்திலும் கூச்சமில்லாமல், வெட்கமில்லாமல் கூட்டம் போட்டுள்ளார்கள். அந்த முறையை ஆதரித்தும் பேசி இருக்கிறார்கள் என்றால் இன்னும் எவ்வளவு அடிமைத்தனமான மனிதர்கள் உலவுகிறார்கள் என்று வேதனைப்படவே தோன்றுகிறது.

100 ஆண்டுகள் இவர்கள் பின் தங்கி இருக்கிறார்கள். நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நாட்டை நகர்த்த விரும்புகிறார்கள்.

1930 ஆம் ஆண்டு தேவதாசி முறையை ஒழிக்கும் சட்டத்தை டாக்டர் முத்துலட்சுமி உருவாக்கி அது சட்டமன்றத்தில் வைக்கப்படுவதற்கு முன் அனைத்துத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. தந்தை பெரியாருக்கும் அனுப்பி வைத்து, கருத்துக் கேட்கப்பட்டது. 'இப்படி கருத்துக் கேட்பதே தவறு, உடனடியாக நிறைவேற்றுங்கள்' என்று எழுதியவர் பெரியார்.

**"கோயில்களில் பெண்களைப் பொட்டு கட்டுவதைத் தடுக்க சட்டம் செய்ய வேணுமாய் முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் சட்டத்தைச் சர்க்கார் நமக்கு அனுப்பி அதன் மீது நமது அபிப்பிராயம் கேட்டிருக்கின்றார்கள். இதற்காக சர்க்கார் பொதுஜனங்களின் அபிப்பிராயம் கேட்பது என்பது கோமாளித்தனம் என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில், கோவில்களில் கடவுள்கள் பேரால் பெண்களுக்குப் பொட்டுக்கட்டி அவர்களையே பொதுமகளிர்களாக்கி நாட்டில் விபசாரித்தனத்திற்குச் செல்வாக்கும் மதிப்பும், சமய சமூக முக்கிய ஸ்தானங்களில் தாராளமாய் இடமும் அளித்துவரும் ஒரு கெட்ட வழக்கம் நமது நாட்டில் வெகுகாலமாய் இருந்து வருகின்றது. அன்றியும், நாளாவட்டத்தில் இது ஒரு வகுப்புக்கே உரியது என்பதாகி, இயற்கையுடன் கலந்த ஒரு தள்ளமுடியாத கெடுதியாய் இந்த நாட்டில் நிலைபெற்றும்விட்டது. ஒரு நாட்டில் நாகரிகமுள்ள அரசாங்கமாகவாவது அல்லது நாட்டின் சுயமரியாதையையோ, பிரஜைகளுடைய ஒழுக்கத்தையோ, நலத்தையோ கோரும் அரசாங்கமாகவாவது ஒன்று இருந்தால் இந்த இழிவான கெட்ட பழக்கம் கடவுள் பேராலும், மதத்தின் பேராலும், சமூகத்தின் பேராலும், தேசிய வழக்கத்தின் பேராலும் இருந்து வர ஒருகண நேரமும் விட்டுக்கொண்டு வந்திருக்காதென்று சொல்லுவோம்" என்று 'குடிஅரசு' (23.3.1930) இதழில் எழுதினார் பெரியார்.**

டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் உருவாக்கிய சட்டத்தை 'குடிஅரசு' இதழில் வெளியிட்டார். இச்சட்டம் குறித்த தனது கருத்தை சென்னை சட்டமன்றச் செயலாளருக்கு எழுதி அதையும் 'குடிஅரசு' இதழில் வெளியிட்டார் பெரியார்.

"டாக்டர். முத்துலட்சுமி மசோதா விரும்பும் சீர்திருத்தம் இந்து சமூக சுயமரியாதையை உத்தேசித்து எவ்வளவோ காலத்துக்கு முன்னாடியே அமலில் வந்திருக்க வேண்டும். எனவே அம்மசோதாவை நான் பூர்ணமாக ஆதரிக்கிறேன்" என்று அதில் குறிப்பிட்டார் பெரியார். (குடிஅரசு 30.03. 1930) இச்சட்டம் நிறைவேறாமல் ஒத்தி வைக்கப்பட்டதையும் பெரியார் அப்போதே கண்டித்தார்.

திராவிட இயக்கத்தின் இரும்புப் பெண்மணியாகப் போற்றப்படும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரை, டாக்டர் முத்துலட்சுமி அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்ததே பெரியார் அவர்கள்தான். தமது சொந்தக் கொடுமைகளையும் தேவதாசி இனப் பெண்கள் எதிர்கொள்ளும் சித்ரவதைகளையும் வைத்து, 'தாசிகளின் மோசவலை அல்லது மதி பெற்ற மைனர்' என்ற நாவலை 1936இல் எழுதி இராமாமிர்தம் வெளியிட்டார். இராமாமிர்தம் - டாக்டர் முத்துலட்சுமி ஆகியோர் சந்திப்பில் உருவானதுதான் 'தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம்.'

ஆரியம் சட்டமன்றத்துக்குள் ஆடிக் கொண்டு இருந்த காலத்தில் மருத்துவர் முத்துலட்சுமிக்கு வெளியில் பக்கபலமாக இருந்தது பெரியாரும், அவரது சுயமரியாதை இயக்கமும்தான். நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த பனகல் அரசர், முத்துலட்சுமிக்கு கல்வி உதவித்தொகை கொடுத்து, பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதிக்கும் நோய்களைப் பற்றிப் படிக்க லண்டனுக்கு அனுப்பி வைத்தார். படிப்பு முடிந்து சென்னை வந்த இவரைச் சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கினார்கள்.

1929 செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டுக்காக 'திராவிடன்' இதழ் சார்பில் வெளியான மலரில் 'தேவதாசி ஒழிப்பு மசோதா' தொடர்பாக நீண்ட கட்டுரை எழுதினார் டாக்டர் முத்துலட்சுமி. 'தேசத்தில் சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டு வருகிறது' என்று அதில் குறிப்பிட்டார். தமக்குத் தரப்பட்ட வரவேற்பில் ஈரோடு உள்ளாட்சி மன்ற வரவேற்பை மறக்க முடியாது என்று குறிப்பிட்டார். ஈரோட்டில் 1930ஆம் ஆண்டு நடந்த இரண்டாவது சுயமரியாதை பெண்கள் மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் டாக்டர் முத்துலட்சுமி.

'சங்கீதத்தாலும் நாட்டியத்தாலும் ஏற்படும் தீமை' என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரையை 'பகுத்தறிவு' இதழ் வெளியிட்டுள்ளது. சமூகச் சீர்திருத்தச் சட்டங்களுக்கு எதிராக இராஜாஜி எப்படி எல்லாம் செயல்பட்டார் என்பதைத் தமது வரலாற்றில் முத்துலட்சுமி எழுதி உள்ளார். ஓமந்தூரார் அமைச்சரவையில் சுப்பராயன் உள்துறை அமைச்சராக இருந்தபோது (1947) தான் தேவதாசி ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்ற முடிந்தது.

**டாக்டர் முத்துலட்சுமியைத் 'தேவதாசிகுலம்' என்று 'சுதேசமித்திரன்' நாளேடு எழுதியபோது, 'சுதேசமித்திரனின் போக்கிரித்தனம்' என்று கண்டித்தவர் பெரியார். "யார் யாருக்கு விபச்சாரத்தனம் செய்யப் பாத்தியதை உண்டு, சட்டம் உண்டு என்பதை எடுத்துக்காட்டுவதுதான் தேசிய பத்திரிக்கைகளின் கடமை போலும்" என்று பாய்ந்து முத்துலட்சுமியைக் காத்தவர் பெரியார்.**

**இவை எல்லாம் நூறு ஆண்டுக்கு முந்தைய கதை என்று கடந்து விட முடியாது. 'அது அந்தக் காலம்' என்று இருந்து விட முடியாது. இப்போதும் இதனைப் புதுப்பிக்க ஒரு கூட்டம் அலைகிறது. புனிதப்படுத்தத் துடிக்கிறது. படுகுழிக்கு பல்லாக்குத் தூக்குகிறது. ஆய்வு, ஆராய்ச்சி என்ற பெயரால் பழமைவாதம் அரிதாரம் பூசி வருகிறது. திராவிடச் சுயமரியாதை இயக்கத்தின் பணி இன்றும், என்றும் தேவை என்பதை அனைவரும் உணர வேண்டும்.**

---

# தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்!
# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!



**நாள் : 02.10.2026 - (வெள்ளிக்கிழமை)**

| நேரம் | ஒன்றிய/நகர/பேரூர்க் கழகங்கள் | இடம் |
|---|---|---|
| காலை 10.30 | தாராபுரம் நகரம் | தாராபுரம் அமராவதி சிலையிலிருந்து பொள்ளாச்சி சாலை - பெரியகடை வீதி வழியாக 'ரோடு ஷோ' |
| மாலை 5.00 | தாராபுரம் நகரம் | உடுமலை சாலை மல்லி ரிசார்ட் அருகில் பொதுக்கூட்டம் |

**தேர்தல் பணிக்குழு**
**101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி**

---

### தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் – இல்லையேல் போராட்டம்!

# எதிர்க்கட்சிகளை திட்டமிட்டு தோற்கடித்து நிர்மூலமாக்குவதே பா.ஜ.க.வின் திட்டம்!

## கரப்பான் பூச்சி ஜனதாக் கட்சித் தலைவர் அபிஜீத் தீப்கே எச்சரிக்கை!

புதுடெல்லி,செப்.26-

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் 48 மணி நேரத்துக்குள் பதவி விலக வேண்டும் என்று கரப்பான் பூச்சி ஜனதாக் கட்சித் தலைவர் அபிஜீத் தீப்கே எச்சரித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் நடைமுறைகள் மற்றும் சிறப்பு தீவிர திருத்தம் செயல்முறை தொடர்பான முடிவுகள் மற்றும் உத்தரவுகள் குறித்து, தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சிங் சாந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் 10 மாதங்களில் குறைந்தது 14 முறை ஆட்சேபனைகளைத் தெரிவித்ததாக வெளியான செய்தி நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் (சி.ஜே.பி.) நிறுவன ஒருங்கிணைப்பாளர் அபிஜீத் தீப்கே, இணை ஒருங்கிணைப்பாளர் ஆசுதோஷ் ரங்கா ஆகியோர் டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது அபிஜீத் தீப்கே, "தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மிகப் பெரிய தேசவிரோதி. இந்திய ஜனநாயகத்துக்கு அவர் மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளார். எனவே, அவர் உடனடியாக பதவி விலக வேண்டும். 48 மணி நேரத்துக்குள் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும். இல்லாவிட்டால், நாடு தழுவிய போராட்டம் மற்றும் காலவரையற்ற உள்ளிருப்புப் போராட்டத்தை சி.ஜே.பி. தொடங்கும்.

சுதந்திரமான, நியாயமான தேர்தலை உறுதி செய்ய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும்.

சி.ஜே.பி. இணை ஒருங்கிணைப்பாளர் ஆசுதோஷ் ரங்கா பேசுகையில், "நாங்கள் மூன்று முக்கிய கோரிக்கைகளை முன் வைக்கிறோம். எங்களின் முதல் கோரிக்கை, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும். அவர் மீது உடனடியாக குற்றவியல் நடவடிக்கை தொடங்கப்பட வேண்டும் என்பதாகும்.

**சுதந்திரமான விசாரனை தேவை!**

எங்களின் இரண்டாவது கோரிக்கை, வர இருக்கும் அனைத்துத் தேர்தல்களையும் உடனடியாக நிறுத்திவைக்க வேண்டும். அனைத்து மாநிலங்களிலும் சிறப்பு தீவிர திருத்த (எஸ்.ஐ.ஆர்.) நடைமுறைக்கு முந்தைய வாக்காளர் பட்டியல்களைப் பயன்படுத்த வேண்டும். இதுவரை மேற்கொள்ளப்பட்ட



எஸ்.ஐ.ஆர். நடைமுறைகள் அனைத்தையும் ஆய்வு செய்ய ஒரு சுதந்திரமான விசாரணை ஆணையம் அமைக்கப்பட வேண்டும்.

எஸ்.ஐ.ஆர். தொடர்பான முடிவெடுக்கும் செயல்முறை தொடர்பான கோப்புகளை தேர்தல் ஆணையம் அழிப்பதற்கு முன்பாக உச்ச நீதிமன்றம் அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களை நியமிப்பதற்கான 2023ம் ஆண்டு சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்பது எங்களின் மூன்றாவது கோரிக்கை. இதற்கென சிவில் சமூகக் குழுக்களை உள்ளடக்கிய ஒரு புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும்.

**மு.க.ஸ்டாலின் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டார்!**

பா.ஜ.க.விற்கு எதிராக பேசியவர்கள் ஒவ்வொருவராக தோற்கடிக்கப்பட்டனர். பா.ஜ.க.வின் செயல்முறை ஒரேமாதிரியாக உள்ளது. இது திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளது.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் தொகுதியிலிருந்து 1 லட்சம் வாக்குகள் நீக்கப்பட்டன.

எதிர்க்கட்சிகளை திட்டமிட்டு தோற்கடித்து அவர்களை நிர்மூலமாக்குவதே பா.ஜ.க.வின் திட்டம்.

வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர்கள் நீக்கப்பட்ட விவகாரம் மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் பினராயி விஜயனை பாதித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர்களை இவ்வாறு ஓரங்கட்டுவது அல்லது நீக்குவது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல.

2024-ல் பா.ஜ.க.விற்கு எதிராக பிரச்சாரம் செய்த தலைவர்களும் கட்சிகளும் ஒவ்வொன்றாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளன. ஞானேஷ் குமார் மீது குற்றவியல் நடவடிக்கை நடுக்க வேண்டும்.

இவ்வாறு சி.ஜே.பி. தலைவர் அபிஜித் தீப்கே பேட்டியளித்தார்.

---

### போக்சோவில் கைதான ஜெம் வீரமணியுடன்

# ஒரே மேடையில் பங்கேற்ற த.வெ.க. அமைச்சர்கள்!

## வீடியோ வெளியாகி இணையத்தில் வைரல்!

சென்னை, செப். 26 -

கடந்த ஜுன் மாதமே போக்சோ வழக்கில் கைதான GEM வீரமணி குறித்து விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், ஜுலையில் அவருடன் ஒரே மேடையில் த.வெ.க. அமைச்சர்கள் பங்கேற்றிருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

GEM வீரமணி மீது கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக விசாரித்த போக்சோ நீதிமன்றம், கடந்த ஜுன் மாதம் அவர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருந்தது. இச்சூழலில் கடந்த ஜுலை மாதம் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், போக்சோ குற்றவாளி GEM வீரமணி உடன் ஒரே மேடையில் த.வெ.க. அமைச்சர்கள் வெங்கட்ராமன், லோகேஷ் தமிழ்ச்செல்வன் பங்கேற்றுள்ளனர்.

போக்சோ வழக்கில் கைதான GEM வீரமணி உடன் அமைச்சர்கள் இருவரும் சரிக்கு சமமாக உட்கார்ந்துள்ளனர். இது தொடர்பான வீடியோ தற்போது இணையத்தில் வேகமாக பரவி வருகிறது. இத்துடன் அந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் லோகேஷ் தமிழ்ச்செல்வன், GEM வீரமணி தங்கள் குடும்ப நண்பர்தான் என கூறியிருக்கிறார்.

**என்ன தொடர்பு?**
**மக்கள் கேள்வி!**

இதுவும் வைரலாகி மக்கள் மத்தியில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஜுன் மாதமே விசாரணையை தொடங்க நீதிமன்றம் உத்தரவிட்ட போதும், GEM வீரமணியுடன் ஒரே மேடையில் த.வெ.க. அமைச்சர்களுக்கு என்ன வேலை?, GEM வீரமணியை தனது குடும்ப நண்பர் என த.வெ.க. அமைச்சர் லோகேஷ் தமிழ்ச் செல்வன் கூறுவதன் பின்னணி என்ன? போக்சோ குற்றவாளி GEM வீரமணியை சரி சமமாக உட்கார வைத்து மரியாதை தந்த காரணம் என்ன? என மக்கள் கேள்விகளை எழுப்பி வருகின்றனர். கொடும் குற்றவாளியுடன் த.வெ.க. அமைச்சர்களுக்கு என்ன தொடர்பு என்ற மக்களின் கேள்விக்கு என்ன பதில் விஜய் சார்? என்றும் பலர் வினா எழுப்பியுள்ளனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல் 2026 முன்னிட்டு கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து திருவள்ளூர் கருங்குழி பேரூர் பகுதியில் உள்ள 94வது பாகத்தில் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார். உடன் ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, நடுகுத்தகை மா.ராஜி, கே.ஜெ.ரமேஷ், வழக்கறிஞர் பெ.வினோத், டி.குமரேசன், சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ் குமார், ஜி.விமல் வர்ஷன், காஞ்சனா சுதாகர், பேரூர் செயலாளர் சுந்தர மூர்த்தி, உள்பட திருவள்ளூர் மத்திய மாவட்ட நிர்வாகிகள் உள்ளனர்.